# பாடம் 49: இறை இரக்கம்

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (9 வயது) | : 1 முதல் 9 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (12 வயது) | : 1 முதல் 9 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (15 வயது) | : 1 முதல் 9 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், திருச்சபையின் மிக முக்கிய மற்றும் வெகுமக்கள் பக்திசார் செபங்களில் ஒன்றான செபமாலை பற்றி நாம் கற்றோம். ஆனால் மரியன்னை செபமாலை மட்டுமே நம்மிடம் உள்ள பக்திசார் செபமன்று. மற்றொரு அதிகரித்து வரும் பக்திசார் செபமாக இறையிரக்க செபமாலை இருக்கிறது. இந்த பாடத்தில், இறை இரக்க பக்தி பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. 1938 அக்டோபர் 5ல், சகோதரி பவுஸ்தீனா (ஹெலன் கொவால்ஸ்கா) என்றப் பெயருள்ள இளந்துறவி, போலந்து நாட்டின் க்ராக்கோ நகரில் உள்ள இரக்கத்தின் அன்னை சகோதரிகள் நிரையத்தின் துறவில்லத்தில் இறந்தார். அவர் முதலாம் உலகப் போரின் மோசமான ஆண்டுகளில், தங்களது சிறிய பண்ணையில் கடினமாகத் துன்புற்ற மிக ஏழ்மையான ஒரு குடும்பத்தில் இருந்து வந்தவர். இந்த சகோதரி மூன்று ஆண்டுகள் மட்டுமே மிக எளிய கல்வி கற்றிருந்தார். துறவில்லத்தில் வழக்கமாக சமையலறையில் அல்லது காய்கறித் தோட்டத்தில், அல்லது ஒரு வாயிலராகத் தாழ்ச்சியோடு அவர் அலுவல்களைச் செய்தார்.

2. 1931 பிப்ரவரி 22ல், நம் ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்து இந்த எளிய கன்னியருக்குத் தோன்றினார், எல்லா மனிதருக்குமாக அற்புதமான இரக்கத்தின் செய்தியைத் தம்மோடு கொண்டு வந்திருந்தார். சகோதரி பவுஸ்தீனா தமது குறிப்பேட்டில் இத்தேதியின் கீழ் நமக்குச் சொல்கிறார்:

“மாலையில், நான் எனது அறையில் இருந்த பொழுது, ஆண்டவர் இயேசு வெள்ளை ஆடையில் இருந்ததை நான் அறிய வந்தேன். ஒரு கரம் ஆசி வழங்குவதாக உயர்த்தப் பெற்றிருந்தது, மற்றது மார்பில் அவரது ஆடையைத் தொட்டுக் கொண்டிருந்தது. மார்பில் ஆடையின் திறப்பில் இருந்து இரண்டு பெருங்கதிர்கள் வெளிவந்தன, ஒன்று செந்நிறமாகவும் மற்றது வெளிர்நிறமாகவும் இருந்தன. அமைதியில் நான் ஆண்டவரை உற்று நோக்கினேன்; என் ஆன்மா அச்சத்தால் ஆட்கொள்ளப்பட்டது, ஆனால் பெருமகிழ்ச்சியும் இருந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு இயேசு என்னிடம் கூறினார், “நீ கண்டதைப் போன்ற படியுருவில் ஒரு உருவத்தை, ‘இயேசுவே, நான் உம்மில் நம்பிக்கை வைக்கிறேன்’ என்ற வரியோடு ஓவியமாகத் தீட்டு.”

(இறை இரக்க ஆண்டவரின் படத்தை மாணவர்களுக்குக் காட்டவும்.)

3. சிறிது நேரத்திற்குப் பின்னர், நம் ஆண்டவர் மீண்டும் அவரிடம் பேசினார்:

“வெளிர்நிறக் கதிர் தண்ணீரைக் குறிக்கிறது, அது ஆன்மாக்களை நேர்மையாளர்கள் ஆக்குகிறது; செந்நிறக் கதிர் குருதியைக் குறிக்கிறது, அது ஆன்மாக்களின் வாழ்வாக இருக்கிறது. எனது வேதனையுற்ற இதயம் சிலுவையில் ஈட்டியால் திறக்கப்பட்ட நேரத்தின் பொழுது, எனது பேரிரக்கத்தின் ஆழங்களில் இருந்து இந்த இரண்டு கதிர்களும் வெளியே வருகின்றன... அவற்றின் புகலிடத்தில் வாழ்கின்ற ஒருவர், கடவுளின் நீதியின் கரத்தால் தொடப்பட மாட்டார்.”

4. அவரது மன்னிக்கும் அன்பின் கூடுதல் அடையாளமாக, திருச்சபை முழுவதிலும் இறை இரக்கத்தின் விழாவைக் கொண்டாட இயேசு அழைப்பு விடுத்தார். சகோதரி பவுஸ்தீனாவிடம் அவர் கூறினார்:

“இந்த உருவத்துக்கு உயிர்ப்பு பெருவிழாவுக்கு அடுத்த முதல் ஞாயிறன்று ஆடம்பரமாக ஆசியளிக்கப்பட வேண்டுமென நான் விரும்புகிறேன், அந்த ஞாயிறு இரக்கத்தின் விழாவாக இருக்க வேண்டும். அந்நாளில், எனது இரக்கத்தின் ஆழங்கள் எல்லாருக்கும் திறக்கப்படும்.

அந்நாளில் ஒப்புரவுக்குச் சென்று தூய திருவிருந்து பெறுகிற எவரும் பாவம் மற்றும் தண்டனையில் இருந்து முழுமையான மன்னிப்பு பெறுவார். எனது இரக்கத்திடம் திரும்பும் வரை மனிதகுலம் அமைதியை அனுபவிக்காது.''

5. 1933ல், கடவுள் தமது இரக்கத்தின் அழுத்தமான காட்சியை சகோதரி பவுஸ்தீனாவுக்கு வழங்கினார். சகோதரி நமக்கு கூறுகிறார்:

''நான் ஒரு பேரொளியை, அதன் நடுவில் தந்தையாம் கடவுளோடு கண்டேன். இந்த ஒளிக்கும் மண்ணகத்துக்கும் இடையே சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை, நம் ஆண்டவரின் காயங்கள் வழியாக, கடவுள் மண்ணகத்தை நோக்க விரும்புவது போன்று நான் கண்டேன். இயேசுவின் பொருட்டு கடவுள் மண்ணத்துக்கு ஆசி வழங்கியதாக நான் புரிந்து கொண்டேன்.''

6. 1935 செப்டம்பர் 13ல் மற்றொரு காட்சியில், அவர் எழுதுகிறார்:

''நான் கடவுளின் தண்டனையை நிறைவேற்றும் ஒரு வானதூதரைக் கண்டேன்... அவர் மண்ணகத்தை அடிக்க இருந்தார்... நான் என்னுள்ளே கேட்ட வார்த்தைகளைக் கொண்டு அக்கறையோடு கடவுளிடம் கெஞ்சத் தொடங்கினேன். நான் இவ்விதமாக செபித்தபோது, வானதூதரின் கையறுநிலை, மேலும் அவரால் நீதி தண்டனையை நிறைவேற்ற முடியாததை நான் கண்டேன்...''

7. பின்வந்த நாளில் ஓர் உட்குரல் சாதாரண செபமாலை மணிகளில் இந்த செபத்தைச் சொல்ல அவருக்குக் கற்றுக்கொடுத்தது:

''முதலில் ஓர் ஆண்டவரின் செபம், மங்கல வாழ்த்து செபம், மற்றும் திருத்தூதர்களின் நம்புகையைச் சொல்லவும். பிறகு பெரிய மணிகளில் பின்வரும் வார்த்தைகளைச் சொல்லவும்: 'நித்திய தந்தையே, உமது அன்பு மகனும், எங்கள் ஆண்டவருமான இயேசு கிறிஸ்துவின் உடலையும் குருதியையும், ஆன்மாவையும் இறைத்தன்மையையும் எங்கள் மற்றும் முழு உலகின் பாவங்களுக்குப் பரிகாரமாக, நான் உமக்கு அளிக்கிறேன்'.''

''சிறிய மணிகளில் பின்வரும் வார்த்தைகளைச் சொல்லவும்: 'அவரது துயர்மிகு பாடுகளின் பொருட்டு, எங்கள் மீதும் முழு உலகின் மீதும் இரக்கமாயிரும்'.''

''முடிவில் இந்த வார்த்தைகளை மும்முறை சொல்லவும்: 'தூய கடவுளே, தூய வல்லவரே, தூய அழிவற்றவரே, எங்கள் மீதும் முழு உலகின் மீதும் இரக்கமாயிரும்'.''

8. இயேசு பின்னர் சகோதரி பவுஸ்தீனாவிடம் கூறினார்:

''நான் உனக்கு கற்பித்த இந்த செபமாலையை நிறுத்தாது சொல். இதைச் சொல்லி வரும் எவரும் இறப்பின் வேளையில் பேரிரக்கம் பெறுவர். பாவிகளின் இறுதி எதிர்நோக்காக இதை குருக்கள் பரிந்துரைப்பர். மிகக் கடினமானப் பாவியும், இந்த செபமாலையை ஒருமுறை சொன்னாலும், எனது முடிவற்ற இரக்கத்தில் இருந்து அருளைப் பெறுவார். முழு உலகமும் எனது முடிவற்ற இரக்கத்தை அறிய வேண்டுமென நான் விரும்புகிறேன். எனது இரக்கத்தில் நம்பிக்கை வைப்போருக்கு கற்பனைக்கு எட்டாத அருளை வழங்க நான் விரும்புகிறேன்...''

''...அவர்கள் இந்த செபமாலையை இறந்து கொண்டிருப்போரின் நிகழ்மையில் சொன்னால், எனது தந்தைக்கும் இறக்கும் நபருக்கும் இடையே நீதிபதியாக அன்றி இரக்கமிகு மீட்பராக நான் நிற்பேன்.''

9. இறையிரக்க செபமாலையை மாணவர்களோடு செபிக்கவும். பயனுள்ளதாக இருக்கும் என நினைத்தால் ஒரு காண்மத்தையும் நீங்கள் பயன்படுத்தலாம்.